**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.164** **நாள் : 11.12.2016**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தற்போது உருவாகியுள்ள வரதா புயலை எதிர்கொள்ள அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலளாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்–தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., ஆகியோர் தகவல்.**

**தற்போது வர்தா புயல் வங்க கடலில் மையம் கொண்டுள்ளதால் மிக அ திகமான கனமழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. மேலும், கடல் சீற்றம் மிக அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.**

தமிழக அரசின் உத்தரவின்படி, வரதா புயலை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக இந்திய ஆட்சிப் பணியாளர் நிலையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் ஆய்வுகள் மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் 16 சுரங்கப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள 6 சுரங்கப்பாதைகளில் உயர்அழுத்த மின்மோட்டார்கள் மற்றும் சூப்பர் சக்கர் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு குழு வீதம் மீட்புப் பணிகளில் ஈடுபட மீட்புக் குழுவினர் தயார்நிலையில் உள்ளனர். இரவு நேரங்களில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள 18 உயர் மின்கோபுர விளக்குகள் தயார்நிலையில் உள்ளது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 622 பம்புகள் பல்வேறு தாழ்வான பகுதிகளில் வைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. அது மட்டுமின்றி முதன்முறையாக அதிக உயர் திறன் கொண்ட 75 எச்.பி. பம்புகள் 2, 50 எச்.பி. பம்பு 1, 35 எச்.பி. பம்புகள்7, 10 எச்.பி 10 மொத்தம் 20 பம்புகள் தனியாரிடமிருந்து வாடைக்கு எடுத்து பாதிக்கப்படக்கூடிய இடங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மின்சார வாரியத்தின் மூலம் மழைக்காலங்களில் மின்தடை மற்றும் மின்கசிவு ஏற்படாத வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீட்புப் பணிகளில் ஈடுபட 108 மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளும், பொதுமக்களை தங்கவைப்பதற்காக 176 நிவாரண முகாம்களில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்ற எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. உணவு தயாரிப்பதற்காக 4 பொது சமையல் கூடங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், மழைக்காலங்களில் சாலையில் விழும் மரங்களை அப்புறப்படுத்துவதற்காக 24 மணிநேரமும் செயல்படும் வண்ணம் இரண்டு வாகனத்துடன் 45 மர அறுவை இயந்திரங்களும், மழைக்காலங்களில் தொற்றுநோய்கள் பரவாமல் தடுத்திடவும், கொசுக்களை கட்டுப்படுத்திடவும் 3337 மலேரியா தொழிலாளர்களுடன், 420 அழுத்த

தெளிப்பான்கள், 245 கையினால் இயக்கும் புகையடிக்கும் கருவிகள் மற்றும் 41 வாகன புகையடிக்கும் கருவிகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்பு குழுவைச் சேர்ந்த 80 நபர்களுடன் 8 மிதவை மீட்பு படகுகள் அரக்கோணத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வரவழைக்கப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது கடல் சீற்றம் அதிகமாகவுதள்ளதால் கடற்கரை ஓரங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மேடான பகுதிகளுக்கு செல்லுமாறும், பொது மக்கள் மெரினா, பெசன்ட் நகர் கடற்கரைகளில் குளிப்பதற்கும், வேடிக்கை பார்ப்பதற்கும் செல்லக்கூடாது எனவும், மின் கம்பங்கள் மற்றும் மின்சாதனப் பெட்டிகளின்அருகில் செல்ல வேண்டாம். மரங்களின் கீழ் வாகனங்களை நிறுத்துவதும், மக்கள் தங்குவதும் தவிர்க்க வேண்டும். மின்சாரம் தடை ஏற்பட வாய்ப்பு உள்ளதால் முன் எச்சரிக்கையாக மெழுகுவத்திகளை வாங்கி வைத்துக்கொள்ளுமாறு, தாழ்வான பகுதிகளில் உள்ளவர்கள் முன்னெச்சரிக்கையாக முகாம்களுக்கு செல்லுமாறும், மருத்துவமனைகள் மற்றும் தனியார் அலைப்பேசி கோபுரங்களில் உள்ள மின் ஜெனரேட்டர்களை தயார் நிலையில் இருக்க வேண்டும் எனவும், தற்போது உருவாகியுள்ள “வரதா” புயலை எதிர்கொள்ள தமிழக அரசின் உத்தரவின்படி, எவ்வித சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. ஆகையால், பொதுமக்கள் எவ்வித அச்சமோ, பயப்படவோ தேவையில்லை.

பொதுமக்கள் தங்கள் புகார்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள 044–25619206, 25619511, 25384965, 25383694, 25367823, 25387570 என்ற தொலைபேசி எண்களிலும், 9445477207, 9445477203, 9445477206, 9445477201, 9445477205 ஆகிய வாட்ச் அப் (Whatsapp) எண்களிலும், gccdm1@chennaicorporation.gov.in, gccdm2@chennaicorporation.gov.in, gccdm3@chennaicorporation.gov.in, gccdm4@chennaicorporation.gov.in, gccdm5@chennaicorporation.gov.in, ஆகிய மின்னஞ்சல் வழியாகவும் புகாரினை பதிவு செய்யலாம். பெறப்படும் புகாரினை சம்பந்தப்பட்ட மண்டலங்களுக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சியின் வாயிலாக கண்டறியப்படும் புகார்களின் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீட்புப்பணி குறித்த தகவல்களை உடனுக்குடன் அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவிக்க வயர்லெஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. என நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையாளர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**